*செய்தி வெளியீடு எண்: 37* *நாள்: 16.07.2019.*

**தேனி மாவட்டம்,**
**ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்**
**மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-.**

**********

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பழையகோட்டை, இராமகிருஷ்ணாபுரம், பாலகோம்பை மற்றும் தேக்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை இன்று (16.07.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பழையக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட பள்ளங்குளம் கண்மாயினை தனியார் பங்களிப்புடன் ரூ.6.5 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி, மகாத்மா காந்தி தேசிய தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.9.8 இலட்சம் மதிப்பீட்டில் 45 மீட்டர் அகலத்தில் 55 மீட்டர் நீளத்தில் 1 1/2 மீட்டர் ஆழத்தில் பிங்கிகுளம் கண்மாய் தூர் வாரும் பணி, இராமகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் ரூ.6.8 இலட்சம் மதிப்பீட்டில் ஆவாரங்குளம் கண்மாய் கரைகளை உயர்த்தி மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி, பாலகோம்பை ஊராட்சியில் ரூ.6.5 இலட்சம் மதிப்பீட்டில் வண்ணான் குளம் தூர்வாரும் பணி, ஒக்கரைப்பட்டி ஊராட்சியில் 40 வருட கால கிணறு புனரமைக்கப்பட்ட பணி, தேக்கம்பட்டி ஊராட்சியில் முத்து ரெங்கபுரம் குளம் கண்மாய் மற்றும் அரண்மனைகுளம் கண்மாய் தூர்வாரும் பணி ஆகிய பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஓக்கரைப்பட்டியில் ஊராட்சியில் 40 வருட கால கிணறு புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 240 அடி ஆழமான கிணற்றில் தற்போது 7 அடி ஆழத்தில் நீர் உள்ளது. இக்கிணற்றின் மூலம் தினந்தோறும் 5,000 லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நடைபெற்று வரும் அனைத்து பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மேற்கொள்ளப்படும் பணிகள் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு தரமானவையாகவும், உறுதியானவையாகவும் அமைந்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ,ப., அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.திலகவதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் எஸ்.கவிதா, உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.பாலச்சந்தர், இ.ஆ.ப., உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) முருகன், துணை ஆட்சியர் (பயிற்சி) ஆர்.நிறைமதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரெங்கராஜ், ஆண்டாள் உட்பட சம்மபந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**